**சுற்றுலா அபிவிருத்தி நிதியம் - 2020**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 23(4) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நியம இல. 02 இற்கு முரணாக காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்களாக இரண்டு வங்கிக் கணக்குகளிற்கிடையே மாற்றப்பட்ட பணத்தை | சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரியை சேகரிப்பதற்காக திறக்கப்பட்டிருந்த 73,104,820 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்கு நேரடி வைப்பு முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்பு காசு உட்பாய்ச்சலாக | நிதியத்தின் இரண்டு கணக்குகளிற்கிடையே தானாகவே ஏற்பட்ட காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் |

| | | |
|---|---|---|
| பிரதிபலிக்கின்றதால் ரூபா 962,402,030 தொகையான சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி, குடியகல்வு வரி மற்றும் ஏனைய பெறுவனவுகளாக பெறப்பட்ட பணம் ரூபா 1,111,441,038 ஆகவும் ரூபா 6,150,647 தொகையான ஏனைய கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்ட பணம் ரூபா 155,189,670 ஆகவும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தன. | காட்டப்பட்டிருந்தமை மற்றும் நிதியத்தின் 7,122,882 ஆம் இலக்க பிரதான வங்கி சேகரிப்பு கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தமை என்பன இவ் விடயத்திற்கான காரணமாகும். எனினும் கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டவாறு காசுப்பாய்ச்சலாக காட்டப்படாமல் தேறிய காசுப்பாய்ச்சல் மீதியொன்றாக கணக்குகளிற்கிடையேயான உள்ளக மாற்றங்கள் காட்டப்பட்டிருந்தன. ஆகையால் கணக்காய்வு அறிக்கை மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு எதிர்கால நிதிக்கூற்றுக்களில் வழங்குவதற்கு நாங்கள் இணங்குகின்றோம். | உள்ளடக்கப்பட முடியாது. |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| பெற வேண்டிய கணக்குகள் - இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை | 470,884 | 703,607 | 232,723 | இணங்கப்பட்டுள்ளது. இரண்டு மீதிகளையும் இணக்கம் செய்த பின்னர் எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சீர்செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| செலுத்த வேண்டிய கணக்குகள் - இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை | 4,675,168 | 3,975,260 | 699,908 | இணங்கப்பட்டுள்ளது. இரண்டு மீதிகளையும் இணக்கம் செய்த பின்னர் எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சீர்செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அலுவல்கள் அதிகாரச்சட்டம்<br>(i) III ஆம் அத்தியாயத்தின் 23(2)(அ) பிரிவு | இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபையால் சேகரிக்கப்பட்ட குடியகல்வு வரியின் 1/3 தொடர்பாக மீளாய்வாண்டில் சேவைக் கட்டணங்களாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 12,551,372 அல்லது 2.5 சதவீதத்தை கழிப்பது தொடர்பாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. எனினும் 2019 சனவரி 29 ஆம் திகதிய பிஎவ்/ஆர்/4/019 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பு இல. 2) சேவைக் கட்டணத்தின் 2.5 சதவீதத்தை பிடித்துவைப்பதற்கு பொதுத் திறைசேரி இணங்கியிருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) 24(3) ஆம் பிரிவு | சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான விதிகள் இப் பிரிவின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பணிப்பாளர் சபையின் தீமானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 3,315,209 தொகையான நிர்வாக செலவினங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இதற்காக பெறப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு இல. 03) | அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய வருமானம் ரூபா 1,037,291,031 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 3,036,183,143 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானத்தில் ரூபா 1,998,892,112 தொகையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் குடியகல்வு வரி வருமானம் ரூபா 1,983,103,993 ஆல் குறைவடைந்தமை மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி ரூபா 15,788,119 ஆல் குறைவடைந்தமை என்பன மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 51,933,332 தொகை வங்கிக்கு நேரடியாக அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது முறையாக இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்படுவதற்கு பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் ஊரடங்கின் போது சேவை வழங்குநர்களிற்கு அவர்களது கொடுப்பனவின் போது மாற்றுவழிகள் கிடைத்திருக்காததுடன் ஒவ்வொரு நாளினதும் கொடுப்பனவின் போது தாமதத்திற்காக தண்டப்பணமாக பணத்தை சேகரிக்கும் முறையை நீக்குவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இச் சூழ்நிலைகளின் கீழ் வாடிக்கையாளர்களால் எதிர்கொள்ளப்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக வங்கிகளிற்கு நேரடியாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது வலைத்தளம் மற்றும் மின்னஞ்சல் அல்லது நாங்கள் ஏற்கனவே விநியோகித்திருந்த விசேட ரீடிஎல் வைப்புச் சிட்டை மூலம் ஒன்லைன் வசதியை பயன்படுத்துவதற்கு சுற்றுலாத்துறையிலுள்ள சேவை வழங்குநர்களிற்கு நிதிப் பிரிவு மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனினும் இலங்கை வங்கியின் ஒவ்வொரு கிளைக்கிடையேயும் விநியோகிக்கப்பட்டிருந்த ரீடிஎல் வைப்புச் சிட்டை போதுமானதாக இருக்கவில்லை. ஆகையால் பதிவு இலக்கம், பெயர் மற்றும் உரிய காலாண்டை குறிப்பிடுவதற்கு இடம் போதாதிருந்த சாதாரண வைப்புச் சிட்டைகளை வரி செலுத்துவோர் பயன்படுத்தியிருந்தனர். வைப்பாளர்களின் விபரங்களை இனங்காண முடியாததன் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆகையால் வரியின் சரியான தொகையை இனங்காண முடியாதிருந்தது. எனினும் இணங்காண முடியாத பணத்தில் ரூபா 5,168,188 தொகை ரீடிஎல் ஆக 2021 பெப்ரவரி 3 அளவில் இனங்காணப்பட்டிருந்தது. | வங்கிக்கு மேற்கொள்ளப்படும் நேரடி பணவனுப்பல்களை சரியாக இனங்கண்டு கணக்குகளை நாளதுவரையாக்குவதற்கு முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். |